325

உ

சிவமயம்.

# ஸ்ரீவாஞ்சியம்

(திருவிழைலூர்)

# தல வரலாறு.

MADRAS
8-FEB 1946

ஸ்ரீ ராமாநுஜாச்சாரியாரால்,

எழுதப்பட்டது.

...பவரம் கொரநாடு,
...ரஸில் பதிப்பிக்கப்பட்டது.

1946.

Q23:38.21183.V
N46.
68751

உ

சிவமயம்

8 - FEB 1946
MADRAS

ஸ்ரீ வாஞ்சியம்

(திருவிழைலூர்)

# தல வரலாறு.

ஸ்ரீ ராமாநுஜாச்சாரியாரால்

எழுதப்பட்டது

மாயவரம் கொரநாடு

ஸ்ரீ பரிமளா பிரஸில் பதிப்பிக்கப்பட்டது.

1946.

சிவமயம்.

# முன்னுரை.

---

எந்நாட்டவர்க்கும் இறைவனாகவுள்ள பரம் பொருள் தென்னாடுடைய சிவனாகி ஆங்காங்குள்ள ஆன்மாக்கள் மூர்த்திதலத் தீர்த்தம் முறையாய்த் தொடங்குதற்குப் பெருங் கருணையோடு எழுந்தருளியுள்ள ஆலயங்கள் மிகப்பலவாம். இங்ஙனம் பலவாய ஆலயங்களே, "மானிடப்பிறவி தானும் வகுத்தது மனம் வாக்காயம், ஆனிடத்தைந்து மாடும் அரன்பணிக் காகவன்றே" என்ற உணர்ச்சியை பக்கள் உள்ளத்தில் மலரவைத்து "சைவத்தின் மேற் சமயம் வேறிலையதிற்சார் சிவமாம் தெய்வத்தின் மேல் தெய்வம் இல்" என வீறுகொண்டுரைத்து வெளிப்படச் செய்தன. ஆகவே ஆலயங்களை மௌன மதப்பிரசாரகர்கள் (Silent Missionaries) என்று கூறலாம். அவற்றுள்ளும் சமய ஆசாரியர்களின் அருமைத்திருப்பாடல்கள் கொண்டுள்ள தலங்களை சிறப்புடையனவாகக் கருதுகின்றனர்.

அவ்வாறு பாடல்பெற்ற பதியான ஸ்ரீவாஞ்சியத் தல (திருவிழைலூர்) வரலாற்றைக்கூற எழுந்ததே இச்சிறு நூல். ஒரு தலத்தைக்கண்டு வணங்கச் செல்வோர் அதனை வணங்கு முன்னரே அதன் அருமை பெருமைகளை யறிந்திருத்தல் மிக்க பயனைத்தருவதாகும். தலப்பெருமை கூறும் நூல்கள் செய்யுள் நடையில் அமைந்திருப்பதினும் உரைநடையில் அமைவதாயின் பலருமறியப் பயன்படுமென்பது உண்மை. இன்ன பலவற்றைக் கருதி இத் திருக்கோயிலின் இடைக்காலப் பரிபாலகராயிருந்த H.R.E. போர்டு இன்ஸ்பெக்டர் திருவாளர் S. முருகையா பிள்ளை B.A. அவர்கள் இந்நூலை ஸ்ரீ ராமாநுஜாச்சாரியார் அவர்களை எழுதுவிக்கச் செய்தனர்.


தருமபுர ஆதீனத்து ஸ்ரீலஸ்ரீ ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் தமது சிவபோக சாரத்தின் கண் இத்தலம் முத்திதருந்தலங்களுள் ஒன்ருகுமெனக் கீழ்வரும் வெண்பாவிற் கூறியுள்ளார்கள்.

"தில்லைவனங் காசி திருவாரூர் மாயூரம்
முல்லைவனங் கூடல் முதுகுன்றம் – நெல்லைகளர்
காஞ்சிகழுக் குன்றமறைக் காடருணை காளத்தி
வாஞ்சிய மென்முத்தி வரும்."

இந்நூல் தலப்பெருமை கூறுவதுடன் தேவாரத் திருப்பாடல்களையுந் தன்னகத்தே கொண்டுள்ளது அவைகளுக்குப் பயன்படத்தக்க முறையில் பொழிப் புரையும் எழுதப்பட்டுள்ளது இத்தலத்திற்குரிய திருப்புகழ்ப் பாடலும் சேர்க்கப்பட்டிருக்கிறது. இதன் முதற்கண் அமைந்துள்ள "தோற்றுவாய்" என்றபகுதிசிறந்தமுறையில் வரையப்பட்டிருக்கிறது. இத்தல வரலாறு அன்பர்களுக்குப் பெரிதும் பயன் படுமென்பது திண்ணம் இங்ஙனம் அன்பர் பணி செய்ய ஆளாகிவிட்ட திரு. S. முருகையா பிள்ளை யவர்கட்கும், தற்பொழுது மானேஜராயிருந்து வருகிற திரு. S. இலக்குமணப் பிள்ளையவர்கட்கும் இன்பநிலை தானே வந்தெய்தவேண்டுமென்று எல் லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றேன்.

மாயூரம்,
6—12—44.

இங்ஙனம்,
வித்வான்,
**சீ. இராமலிங்கம்.**




T.S.RAMACHANDRAN G.A.C 12 1944

POTHAMARAI NORTH KUMBAKONAM.



ஸ்ரீ வாஞ்சிநாதஸ்வாமி தேவஸ்தானம். ஸ்ரீ வாஞ்சியம், நன்னிலம் தாலூகா.

உ

சிவமயம்.

# ஸ்ரீ வாஞ்சியம்

# (திருவிஞ்சையூர்)

# தல வரலாறு.

8 - FEB 1946
MADRAS

"அருளில்லார்க்(கு) அவ்வுலகம் இல்லை; பொருளில்லார்க்(கு)
இவ்வுலகம் இல்லாகி யாங்கு"................ திருக்குறள்.

## தோற்றுவாய்:

உலகில் வாழும் எல்லா உயிர்களும் அடைய விரும்புவது இன்பம். இன்பத்தை விரும்பாத மானிடர் எவருமிலர். அறிவுகுறைந்த பிராணிகளும் துன்பத்தை வெறுக்கின்றன; இன்பத்தை விரும்புகின்றன. ஒருவரது வாழ்க்கையில் இன்பம் எள்ளளவும் இல்லையின் அஃது, உயிரற்ற உடம்பும், கோயிலில்லா ஊரும் போலக்குணமற்றதாகும்.

இன்பம் இருவகைப்படும். அவற்றில் முதலாவது குறைவுடையது; துன்பக்கலப்புடையது; நிலையில்லாதது; பொறிபுலன்களைக்கொண்ட உடம்பின் சார்

பானது; சின்னாளில் வெறுப்பையே விளைப்பது இதனை உலகின்பம்—சிற்றின்பம் என்பர்.

இன்பப்பகுப்பில் இரண்டாவது நிறைவுடையது துன்பக்கலப்பற்றது; நிலையுற்றது, அழியா உயிரின் அனுபவத்திக்கு உரியது. பழகப்பழகத்தெவிட்டாதது. இதனை வீட்டின்பம்—பேரின்பம் என்பர் பெரியோர்.

இன்ப நுகர்ச்சிக்குச்செல்வம் இன்றியமையாதது செல்வம் இல்லாவிடில் இன்பம் துய்க்க இயலாது. செல்வமே இன்பத்துக்கு மூலம். செல்வமும், இன்பமும், காரணமும் காரியமுமாகிய தொடர்பைப்பெற்றுள்ளன. இன்பமே வாழ்வின் குறிக்கோள்; செல்வமே அதற்கேற்ற சாதனம்.

செல்வம் இரண்டுவகைப்படும், ஒன்று பொருட்செல்வம் மற்றொன்று அருட்செல்வம். முன்னது உலகின்பத்துக்குத்துணைசெய்வது. பின்னது பேரின்பத்துக்கு வித்து. உடம்பும், உயிரும் பெற்றுள்ள நம்மனோர்க்கு இருவகை இன்பங்களும் தேவையே. அதற்குப்பொருள், அருள் என்னும் இரண்டு கருவிகளையும் நாம் தேடியடைய வேண்டும். பொருள் ஒன்றைமாத்திரம் நாடிப் பாடுபடுவோமாயின் நம் உயிர் ஏமாற்றம் அடையும். இது நம்மைநாமே மோசஞ்செய்துகொள்வதாக முடியும்- இச்செய்கை அறிவுடைமை ஆகாதல்லவா?

பொருளும் அருளும் புண்ணியத்தின் விளைவு களாம். இப்புண்ணியம் இருவகைக் காரியங்களால் தோன்றிமுதிரும். அவ்விருவகை வழிகளில் ஒன்று, **எல்லாஉயிர்க்கும் ஹிதர்புரிதல்** மற்றொன்று அருட் கடலாகிய **தெய்வத்தியானத்தில் மூழ்குதல்.**

ஓரூருக்கு நடந்துசெல்ல விரும்புபவனுக்கு இரண்டு கால்களும் வேண்டும். ஒருகால்கொண்டு நடத்தல் அரிது. பேரூருக்கு—மோட்சத்திற்கு— வழியாகிற சன்மார்க்கத்திலே நடப்போனுக்கும் மேலே சொல்லப்பட்ட **ஹிதமே புரிதலும், தெய்வத் தியானமும்** என்கிற இரண்டு கால்களும் அவசியம்.

கடவுளின் கட்டற்ற பெருமையை உணரஉணரத் தான் அவன் படைப்புப் பொருள்களுட் சிறந்தவை யாகிய பிராணிகளிடத்து நேயம்பெருகும். கருணை சுரக்கும். கடவுட் டியானத்துக்குரிய காரியம் **வழிபாடு** எனப்படும். வழிபாடாவது மனம், மொழி மெய்கள் ஒருவழிப்படுதலாகும். இக்கடவுள் வழிபாட்டுக்குரிய இடங்களே பற்பல தலங்களிலும் விளங்கும் தேவ குலங்கள் (**ஆலயங்கள்**)

ஆலயங்கள் அளப்பரும் பெருமை உடையன. இவை வான இன்ப அமிர்தத்தை வார்த்து வார்த்து வைக்கப்பட்டுள்ள பொற்குடங்களாகும். இவ்வமுதத் தைக்குடித்துக்குடித்துச் சுவைகண்ட மேலோர்கள்

பலர், தம் பின்னோர்க்காக வடித்து வடித்து வைத் துள்ளனர். இவ்வாலயங்கள், தம்முட் புகுபவர் உள்ளத்தே நல்லெண்ணங்களை உதிக்கச்செய்யும். அலைந்துதிரியும் நெஞ்சத்தை அடங்கிடச்செய்யும். "நான்" என்னும் செருக்கை வேரோடு களைந்துவிடும் ஆன்மநேய ஒருமைப்பாட்டை ஆக்கியளிக்கும். தன்னருள் நினைவைத்தடையறவூட்டும். மனமொழி மெய்களை இனமுற ஒருவழிப்படுத்தியுதவும், உடம் புக்கும், உயிர்க்கும் உறுதி பயக்கும். அரு வாய்க்கட்டற்று எங்கும் நிறையும் பரம்பொருளை நம் உள்ளம் கொள்ளத்தக்க வகைகளில் உருவாக்கி ஓவியமாக்கி உதவும் அடியார்களின் பக்தி வெள்ளத் தையும், அரசர்களின் ஆதரவுகளையும். ஞானியர் களின் ஊனமில்ச்சக்தியையும், முனிவர்களின் கனிவுடைய திரு நோக்கையும், ஆழ்வார், நாயன் மார்களின் அருள் வாக்கையும், தம்பால் புகுவார்க்கு அள்ளி யள்ளி வழங்கும். இத்தகைய பற்பல நலங்களைக்கொண்டு இருமைக் கும் உதவுவனவாகி யிருத்தலாலேயன்றோ " திருக் கோயிலில்லாத திருவில் ஊர்............அடவி காடே" என்றனர் நம் அப்பர். ஆதலின் **ஆலய வழிபாடு** இம்மைக்குரிய **பொருளையும் ஈயும்** மறுமைக்கான **அருளையும் அளிக்கும்** இங்ஙனம் இரண்டு நன்மைகளை யும் தரவல்ல திருக்கோயில்கள் நம் நாட்டில் பல்லிடங்

களிலும் நாட்டப்பெற்றுள்ளன. பொருளையும் அருளையும் ஒருசேர உதவவல்ல பல தலங்களுள் ஒன்று **ஸ்ரீவாஞ்சியம்** என்னும் திருத்தலம். இத்தலம்எங்ஙனம் இருமையும் தரவல்ல பெருமைகொண்டதென்பதை இனிக்காண்போமாக!

## ஊர் அமைப்பு.

தென்னாட்டிற் சிறப்புமிக்கது சோழநாடு; இந்நாடு காவிரிநதியால் வளஞ் செய்யப்படுவது. சோழ மன்னர்களால் பண்டைக்காலத்தே ஆளப்பட்ட சிறப்புடையது; புனலும் பூவுங்கொண்டு பொன்னிநதி நடோறும் வழிகளிலெல்லாம் வழிபாடு செய்கின்ற; ஆலயங்களை மிகுதியாக உடையது. பொதுவாய்க்கூறின் இந்நாட்டினைச்சிறந்த ஆஸ்திக பூமி என்னலாம் இச்சோழமண்டிலம் "பொன்னித் தலநூற்றுத்தொண்ணூறு" என்பதற்கிணங்க காவிரியின் வடகரையில் 63-ம், தென்கரையில் 127- மாக 190- சிவாலயங்களைக் கொண்டது. இத்தகைய சீரும் சிறப்பும் வாய்ந்த சோழநாட்டின் முகம்போல்வது **நன்னிலம்** தாலூகா. இதன் திலகம் போல்வதாகும் நாம் இந்நூலிற் காணும் திருவாஞ்சியம் என்னும் பெருநகரம்; இது நன்னிலம் புகைவண்டி நிலையத்தினின்று (Railway Station) மேற்கில் ஆறுமைலிலுள்ளது. நன்னிலமிருந்து குடவாயில் செல்லும்

பாதையில், நன்னிலமிருந்து 4-மைல் தூரத்தே உள்ளது; இங்குத்தபாற்சாவடி (PostOffice) யும்உள்ளது; ஊர்பெரிது இவ்வூரின் ஜனத்தொகை...........ஆகும் இவ்வூர் புத்தாறு என்ற நதியின் வடபால் உள்ளது. நல்ல நிலவளம் உடையது. உயரிய மாடங்களைக் கொண்டது, பொழில் சூழவுள்ளது, நறும் பொய்கையும் உடையது, குயில் பயில்வது, வரிவண்டு மிழற்று வது தென்றல் துன்றுவது. இச்சிறப்புக்கள்பற்றியே,

மாறுதா ஞெருங்கும் வயல் வாஞ்சியம்
செந்நெலங் கலங் கழனித் திகழ்திரு வாஞ்சியம்
கைதை நெய்தலங் கழனி கமழ்புகழ் வாஞ்சியம்
சேலூர் தண்பணைசூழ்ந்த தென்திரு வாஞ்சியம்
சுற்று மாடங்கள்சூழ்திரு வாஞ்சியம்
தெற்று மாடங்கள் சூழ்திரு வாஞ்சியம்.
திருந்து மாடங்கள் நீடுதிகழ்திரு வாஞ்சியம்
மாலை கோலமதி மாடமன்னுந்திரு வாஞ்சியம்
புடை நிலாவிய பூம்பொழில் வாஞ்சியம்
வண்டு கெண்டி மருவும் பொழில்சூழ்திரு
[வாஞ்சியம்
தீர்த்த மாமலர்ப் பொய்கைத்திகழ்திரு வாஞ்சியம்.

எனப்பலவிதமாக இவ்வூர் நாயன்மார்களாலும் பெரியோர்களாலும் புகழப்பட்டுள்ளது. ஒழுக்க மிக்கவர் உறைபதி இவ்வூர் என்பதும் "சீலமேவு

புகழாற் பெருகுந்திரு வாஞ்சியம்" என்ற ஆளுடைய பிள்ளையார் பாடலாலும் அறியப்படும். இத்தலத்தின் பலப்பல மகிமைகளைப்பற்றி ஸ்காந்தம், பிரமாண்டம், ஸாம்போபம் ஆக்கிநேயம் என்ற பெயர்பூண்ட வடமொழிப்புராணங்களும் ஒருமுகமாக புகழ்கின்றன. இனி அந்நூல்களில் இத்தலத்து மகிமைகள் எவ்வாறு பரவப்பட்டுள்ளன வென்பதைச் சுருங்க வுரைப்போம்.

## திருவாஞ்சியத்தலத்தின் பெருமைகள்.

இத்தலம், இப்பூதலத்திலேயே மகா மகிமை வாய்ந்தது என்னலாம். பாலைவனத்திற் போயடைந்தவன் தாபத்தால் வருந்துகிறான் ஒரு பூந்தோட்டத்தை யடைந்தவன் வருத்தமொன்றும் இல்லாமல் நீங்குவதோடு அத்தோட்டத்தின் நீருந்தியும் மலர் சூடியும், பழங்களையுண்டும் பசி முதலியன அறப்பெற்று ஆனந்தமுறுகின்றான். இவற்றால் தெரிவது யாது? ஒருவனுடைய இன்ப துன்ப அநுபவத்திற்கு அவன் அடையும் க்ஷேத்திரம் காரணமாகின்றதென விளங்குகின்றது. இத்தலமோ எனில் கங்கையினும் புனிதம் வாய்ந்த தீர்த்தத்தையும், தெய்வ மங்கைமார்களுட் சிரேஷ்டமுடைய மங்களநாயகியம்மையையும், தெய்வத்தின் மேம்பட்ட ஸ்ரீவாஞ்சிநாதரையும், மற்றும் கணபதி முதலாகவுள்ள தெய்வக்

குழாங்களையும் (சுகந்த மிக்க சந்தனடவியையும்) மற்றும்பல சிறப்புக்களையும் தன்னகத்தே பெற்று விளங்குகின்றது.

நம் பாரதநாட்டில் தன்னில் மரிப்போர்க்குப் பாவங்களையெல்லாம் போக்கி முக்தியளிக்கும் சிறப்புடைமையால் காசித்தலத்தைச் சிறந்ததொரு தலமாகக்கூறுவர். அங்ஙனம் பெருமைபூண்ட க்ஷேத்திரங்கள் சிலஉள. அவையாவையென்பதை.

"தில்லைவனங் காசி திருவாரூர் மாயூரம்
முல்லைவனங் கூடல் முதுகுன்றம்—நெல்லைகளர்
காஞ்சிகழுக் குன்றமறைக் காடருணை காளத்தி
**வாஞ்சிய** மென் முத்திவரும்"

என்னும் **சிவபோக சாரப்** பாடலாலறியலாகும். இங்ஙனம் ஸ்ரீவாஞ்சியம் காசிக்கு ஒப்பாக விளங்குதலே யன்றி அதனின் மேம்பாடும் கொண்டுள்ளது. இங்ஙனம் சிவபெருமானலேயே திருவாய் மலர்ந்தருளப்பட்டுள்ளது. காசியில் மரணமடைபவர்க்கு முக்திகிடைப்பது எளிதெனினும் ஒருகணமாத்திரையேனும் பாவநீக்கத்தின் பொருட்டுப் பைரவ வாதனையின் கொடுமையும் உள்ளது. ஆனல் ஸ்ரீவாஞ்சியப் பதியிலே பாவங்கள் அவ்வப்போது நசிப்பதனலே புண்ணியம்மாத்திரம் வளரப்பெற்று பைரவ வாதனைக்கு இடமில்லாமற் போகிறது. இங்கு இறக்கும் பிராணிக்குத்தலநாயகர் உடனே ஐந்தெழுத்தருமறை

யை அஞ்செவியில் ஓதி ஆதரிக்கிறார். இத்தலத்தில் காலனுக்கு உயிர்பற்றும் அதிகாரம் இல்லை.

இத்தலம் **பூகைலாயம், நாராயணாச்சிரமம், கந்தாரண்யம் ஸ்ரீவாஞ்சியம்** (திருவிழையூர்) முதலிய திருப்பெயர்களையுங்கொண்டது. திருமால் இத்தலத்திலே இலக்குமியை வாஞ்சித்து (**விரும்பி**) அடைந்தபடியால் ஸ்ரீவாஞ்சியம் என்றபெயர் இதற்கு வழங்கலாயிற்று. சகல ஐஸ்வரியங்களுக்கும் நாயகியாகிய திருமகளை இத்தலத்திலே திருமால் அடையப்பெற்றமையால், இத்தலம் தன்னையடைபவர்க்கு அஷ்ட ஐஸ்வரியங்களையும் அளிக்கும் திறனுடையது என்பதில் தடையுண்டோ! மற்றும், திருமால் (**விஷ்ணு**) ஸ்ரீவாஞ்சிநாதரை வழிபாடியற்றி இத்தலத்திலே எழுந்தருளியிருத்தலின் நாராயணாச்ரமம் என்னும் நாமமும் இத்தலம் பூண்டுள்ளது. நறுமணமிக்க சந்தண விருக்ஷங்களையுடைமையால் கந்தாரண்யம் எனவும் சொல்லப்படுகிறது. இவற்றால் இப்பதியானது சீவர்களுக்குச் சிறந்த பாதுகாப்பும் போகமும் தரவல்லதென்பது மிகையன்று என அறியலாம்.

மேலும், பிரமன் இத்தலமடைந்து படைப்புத் திறம் படைத்தான். இத்தலம் தேவர், அருளுடையோர், இருடியர்கட்கும் இருப்பிடமாவது. கௌதமர், ஜமதக்னி, காச்யபர், அத்திரி, விசுவாமித்திரர்

பரத்துவாஜர், வசிஷ்டர், பராசரர், வான்மீகி, மகுட வர்த்தன மன்னன், வீரதனுசு என்கிற சோழ வேந்தன், கிருஷ்ணன், இலக்குமி, இந்திரன், விகுக்ஷி, அவன் மனைவியான சாருமதி முதலியோர் இத்தலத்திலே தாங்கள் விரும்பியவற்றை அடையப்பெற்று மகிழ்ந்தனர். தன் குலஒழுக்கத்தைக் கைவிட்டுத் தீயொழுக்கத்தை மேற்கொண்ட பாபியாகிய பிப்பலன் என்ற அந்தணன் இத்தலத்தில் மடிந்தமையால் நரகம் நீங்கிச் சிவபதமுற்றான். கடனென்னும் வேடன் மனைவி அனந்தையென்பாள் கூடாவொழுக்கத்தினால் கருவடைந்து பொய்ச்சூளும் கூறிய பாவத்தினின்றும் அகன்று இத்தலத்திலே வழிபாடியற்றி நற்கதியடைந்தனள். இந்த க்ஷேத்திரம் இக்கலியுகத்தில் மண்மயமாகத் தோற்றமளிப்பினும் முந்திய யுகங்களிலே துங்கம்மிகுந்ததங்கமயமாகவும், ஒள்ளிய வெள்ளி மயமாகவும், அம்புஜம் போலும் செம்பு வண்ணமாகவும் முறையே விளங்கியதாகும்.

எனவே. இத்துணைப்பீடும் பெருமையும் படைத்துள்ள திருவாஞ்சியத்திலே வந்தடைந்து சிவதரிசனம், நீராடல், தானம்புரிதல் முதலான நற்கருமங்களை எவர் புரிவாராயினும் அவர் இம்மைக்குரிய ஆயுள் விருத்தி; நோய்நிவர்த்தி; நற்புத்திரப்பேறு; செல்வப் பேறு; தானியம்; தமிழ்மொழிப்புலமை; வம்ச விருத்தி யாதியவற்றை யடைதலோடு இறுதியில் உறுதியா

கச் சிவ சாயுச்சியம் அடைதலும் கூடும்.

இத்தலம் மூவர் தேவாரமும் பெற்றது. ஸ்ரீ மணிவாசகரால் நாவாரப் பாடப்பெற்றது. அருணகிரியாரது இசைப்புகழும் இயைந்தது.

## தீர்த்த மகிமை

• மனைவியில்லாத குடும்பம், நெய்யில்லாத உணவு இவைபோலாகும் தீர்த்தம் இல்லாத ஊர், "ஆறில்லா ஊருக்கு அழகு பாழ்" என்பது ஒரு முதுமொழி. ஊரென்றிருந்தால் நீரென்றும் இருக்கவேண்டும். தீர்த்தங்கள் இரு திறத்தன. சிலவை தம்மில் மூழ்குவோருடைய உடல்மாசு மட்டில் போசகுவன மற்றுஞ்சில, மூழ்குபவருடைய உயிர் மாசுகளையும் களையும் ஆற்றல் வாய்ந்தவை. உடல், உயிர் இவையிரண்டின் அழுக்குகளைப் போக்குவனவே தீர்த்தம் எனத்தக்கவை. கங்கை நதி இங்ஙனம் இரண்டு வன்மையும் உடைமையினாலேயே தூய்மையுடைய தீர்த்தமாகப் பாராட்டப்பட்டுள்ளது. கங்கை நதி, தன்னிடம் முழுகுவோருடைய பாவங்களையெல்லாம் கழுவிக்கொள்ளுகிறது. இங்ஙனம் கழுவிக்கொண்ட தனது பாவங்களை ஒரு தீர்த்தத்தில் மூழ்கித் தான் போக்கிக்கொள்ளுமாயின் அத்தீர்த்தம் அப்பாகீரதியினும் மாகீர்த்தியுடையதென்பதில் ஐயமில்லையன்றே! அக்கங்கை நங்கைக்கும் துங்கமளிப்பது

இத்தலத்திலுள்ள தீர்த்தம் என்ருல் இதனினும் ஏற்ற முடையது எது? இத்திருவாஞ்சியத்துத் திருக்கோயி லுக்கு வடபாரிசத்தில் உள்ளது மிக்க கண்ணியமும் தண்ணிய புனலும் வாய்ந்த **புண்ணிய புஷ்கரணி** என்பது. இதற்கு இந்தக்கலியூழியில் **முனி தீர்த்தம்** என்பது பெயராம். முந்திய யுகங்களில் இதே தீர் த்தம் முறையே **தூய புஷ்கரணி, அத்திரி தீர்த்தம், பராசரதீர்த்தம்** என்ற பெயரோடு விளங்கியது. காசிபர் முதலான முனிவர்கள் கலி தோஷத்துக்கு அஞ்சி இத்தலத்தையடைந்து இச்சலத்தில் நீராடிக் கடுந்தவஞ்செய்து, வேண்டும் வரங்கொண்டமை யால் **முனிதீர்த்தம்** எனப்படுகின்றது.

மற்றும் மகுடவர்த்தனசோழன் பகைவரால் அச்சுற்றபோது பராசரரது உத்திரவுப்படி இத் தீர்த்தத்தில் நீராடிப் பகைவரை வென்று பிரதாப மடைந்தான். மகாதனுசு என்னும் க்ஷத்திரியன் இத்தீர்த்தத்தில் நீராடி அரக்கரூபம் நீங்கி ஆனந்த முற்ருன். சாருமதி யென்பவள் சாபத்தால் தானடைந்து வருந்திய வெண்குஷ்ட நோயை இம்முனிதீர்த்தத்திற் படிந்து போக்கிக்கொண்டாள். தர்மத்வசன் என்னும் வைசியனெருவன் இத் தீர்த்தத்தில் ஸ்நானம் செய்து உயிர்நீங்கும்போது தங்கவிமான மூர்ந்து கைலாயம் சேர்ந்தான். கங்கையானவள் ஈசன் கட்டளைப்படி இந்

நீரில் மூழ்கித் தன் பாவங்களைப் பரிகரித்துக் கொண்டாள். இதனால் இத்தீர்த்தம் குப்தகங்கை எனவும் பெயர்பெற்றது. இது தன்னைச்சுற்றி லும் ஒரு செல்வனைச் சூழ்ந்துள்ள சுற்றத் தார்களைப்போல, பிரமதீர்த்தம், நாரததீர்த்தம் முதலிய பல தீர்த்தங்களால் சூழப்பட்டுள்ளது. அகத்தியமுனிவரை உண்ணும் எண்ணத்துடன் நெருங்கிய, வீரநக்தஞ்சன் என்னும் அரக்கன் அவரால் உதையுண்டு தன் நல்வினைப்பயனால் இத்தீர்த்தத்தில் வீழப் பாவமகன்று துறக்கம் புகுந்தான். கட்குடித்த தோஷமுடையவரும், களவாடிய பாவமுடையவரும், குருத்துரோகஞ் செய்த குற்றமுடையவரும், தீ நட்புப்பூண்ட தீவினையுடையவரும் இத்தீர்த்தத்தால் மேற்குறித்த பாதகங்கள் தீர்த்தருளப்பெற்றனர். சூரியனுக்குச் சிவத்துரோக பாவத்தையும், பாரிபத்திரனென்னும் அந்தணனுக்கு பிரமஹத்தி தோஷத்தையும் இத்தீர் போக்கியருளிய வன்மையுடையது. இதனால், இப்புஷ்கரணி பஞ்சமகாபாதகங்களையும் கொஞ்சமும் நில்லாமல் நீக்கும் திறமுடையதெனத் தெரிகிறதல்லவா!

இதனில் ஞாயிற்றுக்கிழமைகளில் நீராடுவோர் உயர்கதியுறுவர். களவு, இன்னசெய்தல், நன்றி கோறல் முதலான சகல பாவங்களையுடையோர்க்

கும் இத்தீர்த்தத்தில் நீராடுதல் சிறந்த கழுவாய் (பிராயச்சித்தம்) ஆகும். விசேடமாகக் கார்த்திகை மாதத்து ஞாயிற்றுக்கிழமைகளில் இந்நீரில் மூழ்குவோர் பாவம்நீங்கிப் பரிசுத்தராகி விரும்பும் வரங்களையும்தடையறஅடைவர். ஆதலால், இத்தகைய புண்ணியப் புனலில் நீராடி அறிந்தோ அறியாமலோ பண்ணியபாவங்களினின்றும் நீங்கிப்பரிசுத்தமுடைய வராகக் கடவோம்!

**மூர்த்தியின் கீர்த்தி.**

ஒரு ராஜ்யத்தில் ராஜா அதிகசிறப்புடையவன். அவனே சர்வ அதிகாரமும் உடையவன். அவனே நாட்டுக்கு உயிர். 'மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்' என்றனர் பெரியோரும். ஒரு மன்னனுக்குப் பரிவாரங்கள் உண்டு. அவர்கள் அவ்வரசனின் ஆணை வழியொழுகி நலம்புரிவர். குடிமக்கள் அப்பரிவாரத்தினரை விரும்பி அவரால் அரசனை அடையப்பெற்றுத்தம் குறைகளை முறையிட்டு நலங்களை அடைவர். இது இவ்வுலகின் அரசியல் முறை.

இத்தலத்திலிருக்கும் மூலத்தான மூர்த்தியே சர்வ லோகாதிபதி. எல்லாம் வல்லவர். அருட்குறியாக விளங்குபவர், விண்டுவுக்கும் அயனுக்கும் அவரவர் தொழிலாற்றும் திறந்தந்தவர். முனிவர் பலர்க்கு அநுக்கிரகம் புரிந்த மூர்த்தி.

இம்மூலத்தான மூர்த்திக்குத் **திருவாஞ்சிநாதர்** என்பது திருநாமம். இவர் அயனால் வழிபடப்பட்டமையால் **ந ளி னா ச ன ர்** என்றும் வழங்கப்பெறுவர். அகத்திய முனிவர் வேண்டுகோட்படி **அகத்தியேசுரர்** என்ற பெயரும் பூண்டவர். இவர் அப்பிராகிருதமான கயிலைக் கொடுமுடியினின்றும் இத்தலத்திற்குப்ராகிருகம் சென்றதால் **ப்ராகிருகேச்வரர்** என்ற திருப்பெயரும் உடையவர். ஓர் அந்தணனுடைய கொலைப்பாதகத்தைச் செந்தண்மை பூண்டு நீக்கியருளியமையால் **புரூணக்நேசர்** என்ற பெயரும் பூண்டவர். கலியை நிக்ரகம் செய்தனராதலால் **கலிநிக்ரகர்** எனப்படுவர், சந்தண விருக்ஷங்களினிடையே வீற்றிருத்தலால் **ஸ்ரீ கந்நாரண்யர்** எனவும், **சந்தணவனநாதர்** எனவும் இயம்பப்படுவர். இப் **பூகைலாசநாதர்** யமன் வேண்டுகோளின்படி அவனுக்கும் ஆதிபத்தியம் அளித்து அவனை வாகனமாகவும் ஏற்றருளினபடியால் **யமவாகனன்** என்றும் போற்றப்படுகிறார். இந்நிகழ்ச்சி இத்தலத்துக்குரிய விசேஷம் பொருந்தியதாகும்.

பூர்வம், சூரியன் வழிபடுங்காலத்தில் மேற்குமுகமாக இருந்தவர், அனிந்திதை கருவறுத்த காலத்தே தான் கிழக்குமுகமாயினர் என்று ஆக்நேய புராணம் கூறுகிறது. இம் **மூலலிங்கம்** தற்போது கல்மயமாகக் காட்சியளிக்கிறது, என்று

லும் கிருதயுகத்தில் இரத்தினமயமாகவும், திரேதா யுகத்தில் பொன்மயமாகவும், துவாபரயுகத்தில் வெள்ளிமயமாகவும் விளங்கிய விழுப்பமுடையது. இவ்விலிங்கத்திலே எல்லாத்தலத்து லிங்கங்களின் கலைகளும் ஒவ்வொருநாளும் நள்ளிரவில் வந்தொடுங்கும். வைகறையில் வெளிப்பரவும். பிரளய காலத்தில் இவ்விலிங்கம் தேயு (நெருப்பு; ஜோதி) மயமாக விளங்கும். மேலும், இவ்வருட்குறி உலக நன்மைக்காகவே பாதள உலகின்றும் முளைத்தருளிய சுயம்புலிங்கமாகும். கணக்கற்ற அயன் அரி இந்திரர்களால் பூஜிக்கப்பட்டிருத்தலின் மிகவும் பழமை வாய்ந்ததுமாம். இவ்விலிங்கத்தினைத் தம் ஆயுட்காலத்தில் ஒருமுறையாயினும் தரிசிக்கும்பேறு கிடைக்கப்பெற்றவர் பாபிகளாயிருப்பினும் முத்திப்பேறு சித்திக்கப் பெறுதல் ஒருதலை. இவ்விலிங்கம் காரணமாகவே இத்தலம் முத்தித்தலங்களுள் ஒன்றாகும் சிறப்புப் பெற்றது. "முத்தியருள்தரு திருவாஞ்சியத்திலமரர்கள் பெருமானே" என்று திருப்புகழில் புகழப் பட்டுள்ளது.

**அம்பிகை**

இத்தலத்து அம்பிகையின் திருநாமம் **வாழவந்தநாயகி** என்பதாம். **மங்களநாயகி** எனவும் மறுபெயருண்டு. இவ்வம்மையின் பெருங்கருணையே

இத்தலத்தோற்றத்துக்கு அடிப்படை என்னலாம். இவர், கயிலையினின்றும் இத்தலத்தே பாக்கியப்பெற வந்தருளியதால் **பாக்கியநாயகி** எனவும் பகரப்படுவர். இவ்வம்மையார் பிரமனைத்தந்து அவற்கு உலகாக்கும் வித்தையையும் அருளியவர். சகல புவனங்களுக்கும், உயிர்களுக்கும் ஆதிகாரணி ஆதலால், இவரைப்பக்தியோடு வழிபட்டால் நல்வாழ்வும், மங்களமும், பாக்கியங்களும் பல்கும் என்பதில் சந்தேகமில்லை.

**சுற்றுத்தெய்வங்கள்.**

இத்தலத்துக்கென்றே விசேடமுடையது யமன் கோட்டம் இருத்தல், யமன், தான் பிராணிகளைக் கொன்றபாவத்தினின்றும் நீங்க இங்கு அருந்தவம் ஆற்றினன். இத்தலத்தீசனுல் **அபராசகர், க்ஷேத்திரபாலகர்** என்ற சிறப்புப்பெயர்களையும் வழங்கப்பெற்றுன். இவ்வீசனிட்ட கட்டளைப்படி அவரது சந்நிதியிலே உள்ளான். வாஞ்சிநாதருக்கு வாகனமுமாயினன்.

மேலும் இதர ஸ்தலங்களிற்போலவே இங்கும் பலர் சுற்றுப்பரிவார தேவதைகளாக விளங்குகின்றனர். இவர்கள் பெயர் விபரமும், எழுந்தருளியிருக்கும் இடவிபரமும் இந்நூலில் இணைக்

கப்பட்டுள்ள திருக்கோயில் நிலப்படத்திலும், விவ ரணத்திலும் கண்டறிக.

**தலவிருட்சம்**

இத்தலத்துப்பெருமான் உகந்தது **சந்தனமர** மாகும். இதனால் இத்தலத்துக்குக் கந்தாரண்யம் என்ற பெயரும் வழங்குகிறது. இவ்விருட்சங்களை இராஜகோபுரத்தினருகே காணலாம்.

**இறுவாய்**

உடம்பு பெற்றதன்பயன் இறைவனை வழிபட்டு வீடுபேறு அடைவதேயாகும். வீடுபேற்றுக்குத் தகுதிவினையின்நீங்குதல். இத்தலமும், தீர்த்தமும், மூர்த்தியும் எளிதில் வினைகடியும் பெருந்திறலுடை யனவாக விளங்குகின்றன. மேலும் இவ்வுலக போகபாக்கியங்களையும் இவை வழங்குவனவாக உள்ளன. ஆதலால், நமது புண்ணியப்பயனால் விளங் கும் இத்தலத்தை ஒருமுறையேனும் அடைந்து தீர்த்தத்தில் குடைந்து ஆடிப்பரமனை நாடிப்பரவி இருமைப்பேறும் எளிதினில் அடைந்து உய்வோ மாக.

ஸ்ரீவாஞ்சியம், தீவாமங்கலம், நெய்க்குப்பை பத்தளை, நன்னிலம் கிராமங்களில் ஏக்கர்310,செண்ட் 81, ஏ. 6. செ. 49. ஏ. 5. செ. 47. நஞ்சை

புஞ்சையும் முறையே உள்ளன. நஞ்சையிலிருந்து சுமார் 6200-கலம் நெல்லும், தென்னைமரங்களுடைய குத்தகை ரூ. 800-ம் ஆண்டுவருபானம். தவிர சர்க்கார் மோகினிபணம் ரூ. 972-2-10, இதில் சர்க்கார் கிஸ்திமட்டும் ரூ. 3250 செலவாகிறது. இலுப்பைத்தோப்புக்களில் இருந்து கிடைக்கும் இலுப்பைக்காய்களை எண்ணெயாக கோவிலுக்கு உபயோகப்படுகிறது. திருஆபரணங்களும், புதிதாக வர்ணம் இட்ட வாகனங்களும் இருக்கின்றன.

சென்னை இந்துமத பரிபாலன போர்ட் உத்திரவு 447/17-4-31 படி ஆலய நிர்வாகம் செவ்வையாக நடக்கவேண்டுமென்று ஏற்படுத்திய ஸ்கீம்படி மூன்று தர்மகர்த்தாக்கள் அடங்கிய போர்டின் பார்வையில் இருந்துவருகிறது. தேவஸ்தான வேலைகள் எல்லாவற்றையும் கவனிப்பதற்கு போர்டார் அவர்களால் நியமிக்கப்பட்ட உத்தியோகஸ்தர் (மானேஜர்) இருக்கிறார்.

நாள்தோறும் நான்குகால பூஜைகள் தேவஸ்தான சொத்துவருமானத்திலிருந்து நடக்கின்றன. 1353-ம் பசலிமுதல் இரண்டாங்காலபூஜை ஏற்படுத்தி குறைவற நிகழ்கின்றது. சிவாலயங்களில் உள்ள எல்லா மாசாந்திர உத்ஸவங்களும் செய்யப்படுகின்றன. மாசி மாதம் சோமாஸ்கந்தமூர்த்திக்கு

அஸ்வதி நக்ஷத்திரத்தில் ப்ரம்மோத்ஸவம் ஆரம்பமாகி பரணியில் யமதீர்த்தமும் மகத்தில் தீர்த்தவாரியாகி முடிவடைகிறது. ஆடிமாதத்தில் வாழவந்தாள் அம்பாளுக்கு பத்துநாட்கள் பூரஉத்ஸவம், கார்த்திகை மாதத்தில் கடைசி ஞாயிற்றுக்கிழமையை பத்தாவது தினமாக வைத்து சுப்பிரமண்யஸ்வாமிக்கு உத்ஸவம் நடைபெறுகிறது. பானுவாரங்களில் ஸ்ரீ சுப்பிரமண்யஸ்வாமி குப்தகங்கையில் தீர்த்தம் அளிப்பார். அவ்வமயம் ஜனங்கள் குப்தகங்கைக் கரையில் கூடி ஸ்நானம் செய்து முக்தியை நாடுகிறார்கள்.

1 ஸ்ரீவாஞ்சியநாதஸ்வாமி
2 ஸோமாஸ்கந்தமூர்த்தி.
3 வெண்ணெய்ப்பிள்ளையார்
4 அறுபத்துமூவர்
5 தக்ஷணாமூர்த்தி
6 காசிவிஸ்வநாதர்
7 சந்திரமௌளீஸ்வரர்
8 சந்திரசேகரர்
9 பாலசுப்பிரமண்யர்
10 மீனாக்ஷிசுந்தரேஸ்வரர்
11 சுப்பிரமண்யஸ்வாமி
12 பிரிதிவுலிங்கம்

13 அப்புலிங்கம்
14 மஹாலெக்ஷ்மி
15 தேயுலிங்கம்
16 வாயுலிங்கம்
17 ஆகாயலிங்கம்
18 தக்ஷிணகைலாஸநாதர் ஸரஸ்வதி
19 சனீஸ்வரபகவான்
20 ஷட்லிங்கம்
21 சண்டிகேஸ்வரர்
22 துர்க்கையம்மன்
23 ஆனந்தகூபம்
24 நடராஜர்கோயில்
25 பைரவர்
26 நட்டுவன்பிள்ளையார்
27 துவஜஸ்தம்பம்
28 பலிபீடம்
29 நந்திகேசுவரர்
30 மங்களநாயகியம்மன்
31 பள்ளியறை
32 உத்ஸவமூர்த்தியம்பாள் (வாழவந்தாள்)
33 மெய்க்காவல் அறை
34 கருவூலம்
35 அலங்காரமண்டபம்
36 யாகசாலை

37 ஸ்டோர்
38 மடைப்பளி
39 விக்னேஸ்வரர்
40 சுப்பிரமண்யர்
41 ஸ்தலவிருட்க்ஷங்கள் (சந்தனமரங்கள்)
42 யமதர்மராஜாகோயில்
43 புஷ்யமண்டபம்
44 குப்தகங்கை
45 கங்கைக்கரைப்பிள்ளையார்
46 கருஅறுத்தான்ஸன்னதி
47 சிறியதேரடிமண்டபம்
48 பெரியதேரடிமண்டபம்
49 சந்தியாவந்தன மண்டபம்
50 திருமாலை

உ

சிவமயம்.

# திருவாஞ்சியத் தேவாரப்பதிகங்கள்.

திருஞானசம்பந்தஸ்வாமிகள் அருளிச்செய்தது.

சுவாமி பெயர்—வாஞ்சிலிங்கேச்வரர்.
அம்பிகை பெயர்—வாழவந்தமங்களநாயகி.

## திருவாஞ்சியம்—பண்—இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

## வாஞ்சியம் சிவபிரானுக்கு வாஞ்சையுள்ளபதி.

வன்னி கொன்றை மதமத்தம் எருக்கொடு கூவிளம்
பொன்னி யன்றசடை யிற்பொலி வித்தபு ராணனர்
தென்ன வென்றுவரி வண்டிசை செய்திரு வாஞ்சியம்
என்னை யாளுடை யானிட மாகவு கந்ததே.

### பொழிப்புரை.

பொன்மயமாக விளங்கும் சடையின் கண் வன்னி, கொன்றை, ஊமத்தம், வெள்ளெருக்கு, வில்வம் முதலியவைகளை அணிந்துள்ள பழமையானவரும், என்னை அடிமையாக ஆட்கொண்டருளியவருமான திருவாஞ்சிநாதருக்குப் பிரியமான தலம் யாதெனில் தென்னவென்று வரிகளையுடைய வண்டுகள் ரீங்காரம்செய்கின்ற திருவாஞ்சியம் என்னும் தலமாகும்.

## சிவன்வாஞ்சியம் மேவியமை.

காலகா லர்கரி கானிடை மாநட மாடுவர்
மேலர்வே லைவிட முண்டிருள் கின்றமி டற்றினர்
மாலை கோலமதி மாடமன்னுந்திரு வாஞ்சியம்
ஞாலம்வந் துபணியப்பொலி கோயில் நயந்ததே.

பொழிப்புரை.

யமனை உதைத்த திருவடியினை உடையவரும், எரிகின்ற இடுகாட்டின்கண் நடனமாடுகின்றவரும், எல்லோருக்கும் மேலானவரும், பாற்கடலினுண்டான ஆலகாலவிஷத்தை உண்டு கறுத்த கண்டத்தையுடையவருமான சிவபெருமான் பூமியிலுள்ளோர்கள் தன்னை வந்து வணங்கும்பொருட்டு விரும்பித் தங்கியிருக்கும் கோயில்யாதெனில் மாலைவேளையில் அழகிய சந்திரன் பொருந்தும்படி உயர்ந்த மாடமாளிகைகள் விளங்கும் திருவாஞ்சியம் என்னும் தலமாகும்.

## வாஞ்கிநாதர் விளைப்பன.

மேவிலொன் றர்விரி வுற்ற இரண்டினர் மூன்றுமாய்
நாவின் நா வர்உடலஞ்சினர் ஆறர் ஏழோசையர்
தேவில் எட் டர்திருவாஞ்சியம் மேவிய செல்வனார்
பாவந்தீர்பர் பழி போக்குவர் தம்அடியார்கட்கே.

பொழிப்புரை.

ஒருபொருளாகவும், இருபொருளாகவும், மும்மூர்த்தி ஸ்வரூபராகவும், நால்வேதத்தவராகவும், பஞ்சமூர்த்தரூபராகவும், ஷாட்குண்யராகவும், ஸப்தஸ்வரூபராகவும், அஷ்டமூர்த்தராகவும் உள்ள திருவாஞ்சியம் என்னும் தலத்தில் விருப்பத்துடன் எழுந்தருளியிருக்கும் செல்வரான சிவபெருமான் தன்னை

வழிபடும் அடியார்கட்கு உண்டாகும் பாவங்களைத் தீர்த்து, அப்பாவங்களால் உண்டாகும் தண்டனைகளையும் போக்குவர்.

## சிவன் திருக்கோலம்.

சூலமேந் திவளர் கையினர் மெய்சுவன் டாகவே
சாலநல் லபொடிப் பூசுவர் பேசுவர் மாமறை
சீலமே வுபுக ழாற்பெரு குந்திரு வாஞ்சியம்
ஆலமுண் டஅடி கள்ளிட மாக அமர்ந்ததே.

68751

## பொழிப்புரை.

திரிசூலத்தை ஏந்திய வளர்கின்ற கையை உடையவரும், சரீரத்தின் நிறம் மாறுபடும்படி தூவள்யமான திருநீற்றைப்பூசியவரும், சிறந்த வேதங்களைத்திருவாய்மலர்ந்தருளுபவரும், ஆலகால விஷத்தை உண்டவருமான சிவபெருமான் தனதிருப்பிடமாககொண்ட தலம் யாதெனில் ஒழுக்கத்திறை சிறந்த புகழ்மிகுந்த திருவாஞ்சியமென்னும் திருப்பதியாகும்.

O/23:38.2193.Y
N46

## வாஞ்சியம் நோய் போக்கும்.

கையிலங் குமறி யேந்துவர் காந்தளம் மெல்விரல்
தையல்பா கமுடை யார்அடை யார்புரஞ் செற்றவர்
செய்யமே னிக்கரி யம்மிடற் றார்திரு வாஞ்சியத்
தையர்பா தம்அடை வார்க்கடை யாஅரு நோய்களே

### பொழிப்புரை.

கையில் விளங்குகின்ற மானை ஏந்தியவரும், காந்தளமலர்போன்ற மெல்லிய விரல்களையுடைய உமாதேவியாரைத்தன் வாமபாகத்தி லுடையவரும், விரோதிகளான திரிபுராசுரர்களின் நகரங்களை அழித்தவரும், சிவந்ததிருமேனியுடையவரும், நீலமான கண்டத்தையுடையவருமான திருவாஞ்சியமென்னும் தலத்தில் எழுந்தருளியிருக்கும் ஐயனை சிவபெருமானுடைய பாதங்களைச் சரண்அடைபவரைத் தீர்த்தற்கரிய (ஜனன மரணமாகிய) எவ்வித நோய்களும் அணுகமாட்டா.

## சிவன் அம்மையப்பராக விளங்குதல்.

அரவம்பூண் பரணி யுஞ்சிலம் பார்க்க அகந்தொறும்
இரவில்நல் லபலி பேணுவர் நாணிலர் நாமமே
பரவு வார்வினை தீர்க்கநின் றார்திரு வாஞ்சியம்
மருவியேத் தமட மாதொடு நின்றஎம் மைந்தரே.

பொழிப்புரை.

சர்ப்பங்களை ஆபரணமாக அணிந்தவர். கால்களில் அணிந்துள்ள சிலம்புகள்சப்திக்க வீடுதோறும் இராக்காலங்களில் அன்பர்கள் கடும் பலியை ஏற்பவர். நாணமில்லாதவர் தன் திருநாமமாகிய ஐந்தெழுத்தினை ஜபிப்பவர்களின் தீவினைப் பயன்களைக் களைய திருவாஞ்சியம் அன்றும் திவ்ய திருப்பதியில் அவர்கள் தன்னை தோத்தரித்து ஏத்த உமையவளுடன் நின்றமைந்தராகிய சிவபெருமான் எழுந்தருளி யுள்ளார்.

அரனை வழிபட அல்லல் அறும்.

விண்ணி லானபிறை சூடுவர் தாழ்ந்து விளங்கவே
கண்ணி னல்அநங் கன்றுடலம்பொடி யாக்கினர்
பண்ணி லானஇசை பாடல்மல் குந்திரு வாஞ்சியத்
தண்ணலார் தம்அடி போற்றவல் லார்க்கில்லை
[அல்லலே.

பொழிப்புரை.

ஆகாயத்தில் உள்ள பிறைச் சந்திரனை அதன் கலைகள் பொலிவுரும்படிதன் மகுடத்தில் தரித்தவரும்

நெற்றிக்கண்ணால் மன்மதன் சரீரத்தை நீறுக்கியவரு மான இசையோடு கூடிய பாடல்கள் மலியப்பெற்ற திருவாஞ்சியம் என்னும் தலத்தில் எழுந்தருளியிருக் கும் பெருமை பொருந்தினவரான சிவபெருமானின் அடிகளைத் துதிப்பவர்கட்கு எவ்வித துன்பமும் உண்டாவதில்லை.

## வாஞ்சி வேந்தர் வினைகடிபவர்.

மாடநீ டுகொடி மன்னிய தென்னிலங் கைக்குமண்
வாடியூ டவரை யாலடர்த் தன்னருள் செய்தவர்
வேடவே டர்திரு வாஞ்சியம் மேவிய வேந்தரைப்
பாடநீ டுமனத் தார்வினை பற்றறுப் பார்களே.

### பொழிப்புரை.

மாடங்கள்தோறும் உயர்ந்த கொடிகள் விளங் கும் தெற்கிலுள்ள இலங்கைக்கு அதிபதியான இரா வணன் துன்புற்று வருந்தும்படி கைலாய மலையால் துன்புறுத்தி அப்பொழுதே அவனுக்கு அருள்செய்த வரும், வேடனாகிய வேடத்தைப் புனைந்தவரும், திரு வாஞ்சியம் என்னும் திருப்பதியின்கண் எழுந்தருளி யிருப்பவருமான அரசராகிய சிவபெருமானைப்

பாக்களால் துதிக்கதற்குரிய சிறந்த மனதினையுடைய வர்கள் தங்கள் வினைப்பயன்களை நீக்கிக்கொள்வர்.

## அடியார்க்கடியர் பெரும் பேருகள்.

கெடிகொள்நோ யின்அடை யார்திறம் பார்செறு
தீவினை
கூடியகூற் றமூங் கண்டக னும்புகல் தான்வரும்
நெடியமா லொடயன் எத்தநின் றார்திரு வாஞ்சியத்
தடிகள்பா தம்அடைந் தாரடி யாரடி யார்கட்கே.

## பொழிப்புரை.

நீண்ட திருமாலுடன் பிரம்மனும் துதிக்கும்படி நின்றவரான திருவாஞ்சி நாதரின் பாதங்களைச் சரண் அடைந்தாரின் அடியார்களின் அடியார்களைக் கீழ்மையான நோய்கள் அணுகமாட்டா. நன்மார்க்கத்தினின்றும் அவர்கள் மாறுபட மாட்டார்கள். அழிக்கின்ற தீவினைகளும், கொடிய யமனும் அவர்களைக்கண்டமாத்திரத்தில் நீங்கும் சாயுச்சிய பதவி தானே வந்தடையும்.

## சைவ நூலை ஓதுக.

பிண்டமுண் டுதிரி வார்பிரி யுந்துவ ராடையார்
மிண்டர்மிண் டும்மொழி மெய்யல பொய்யிலை
[யெம்இறை
வண்டுகெண் டிமரு வும்பொழில் சூழ்திரு வாஞ்சியத்
தண்டவா ணன்அடி கைதொழு வார்க்கில்லை !
அல்லலே.

### பொழிப்புரை.

உணவினை உண்டு திரிபவர்களும், விரித்து அணியும் காவிவஸ்திரங்களை அணிந்தவர்களுமான சமணர்கள் கூறும் அவர்கள் சமய மொழிகள் உண்மையல்ல; (ஆகையால் அவற்றை நம்பாதீர்கள்) நான் சொல்வன பொய்யல்ல. எமது இறைவராகிய வண்டுகள் துளைக்கும் புஷ்பங்கள் நிறைந்த சோலைகளால் சூழப்பட்ட திருவாஞ்சியம் என்னும் தலத்தில் கோயில் கொண்டுள்ள சர்வலோக வியாபியான திருவாஞ்சி நாதரின் பாதங்களைத் தொழுபவர்க்கு எத்தகைய துன்பமும் உண்டாகாவாம்.

## தேவாரத்தைப் பாடுக.

தென்றல் துன் றும் பொழில் சென்றணை யுந்திரு
வாஞ்சியத்
தென்று நின்ற இறை யானையு யுணர்ந்தடி
[யேத்தலால்
நன்றுகா ழிமறை ஞானசம் பந்தன் செந்தமிழ்
ஒன்றுமுள் ளமுடை யாரடை வாருயர் வானமே.

திருச்சிற்றம்பலம்.

### பொழிப்புரை.

தென்றல் வீசுகின்ற சோலைகள் சூழ்ந்த திருவாஞ்சியத்தில் எக்காலத்தும் நிற்கின்ற இறைவனை அறிந்து அவரது பாதங்களைத் துதித்தலால் நன்மை யடைந்த சீர்காழியில் அவதரித்த வேதங்களில் தேற்சியுற்ற ஞானசம்பந்தன் செப்பிய செந்தமிழ்ப்பாக்கள் பொருந்திய மனமுடையவர்கள் உயர்ந்த மோட்ச பதவியை அடைவர்.

உ

சிவமயம்.

# திருவாஞ்சியத் தேவாரப் பதிகங்கள்.

## திருநாவுக்கரசு சுவாமிகள் அருளிச்செய்தது.

## திருவாஞ்சியம் - திருக்குருந்தொகை.

8

திருச்சிற்றம்பலம்.

### திருவாஞ்சியேசுரரைப் பணிக துன்பம் வாரா.

படையும் பூதமும் பாம்பும்புல் வாயதன்
உடையுந் தாங்கிய வுத்தம ணார்க்கிடம்
புடைநி லாவிய பூம்பொழில் வாஞ்சியம்
அடைய வல்லவர்க் கல்லலொன் றில்லையே.

பொழிப்புரை

சூலம் முதலிய படைகளும், பூத கணங்களும் பாம்பாபரணங்களும், மானும் தோலுடையும், தரித்த உத்தமனார் தங்கும் இடமாகிய புஷ்பங்கள் நிறைந்த சோலைகள் நிறைந்த திருவாஞ்சியம் என்ற தலத்தை அடைபவர்கட்கு எவ்வகைத் துன்பமும் அணுகமாட்டா,

## திருவாஞ்சியப்பதி செல்லுங்கள்.

பறப்பை யும்பசு வும்படுத் துப்பல
திறத்த வும்முடை யோர்திக ழும்பதி
கறைப்பி றைச்சடைக் கண்ணுதல் சேர்தரு
சிறப்புடைத் திருவாஞ்சியஞ் சேர்மினே.

பொழிப்புரை

நெய்விடு பாத்திரமும் பசுவுங்கொண்டு பல திறப்பட்ட யாகங்களைச்செய்கின்ற அந்தணர் வசிக்கும் பதியும் களங்கத்தினையுடைய பிறைச் சந்திரனைத் தலையில் சூடிய நெற்றிக்கண்படைத்த மேன்மையுடைய சிவபெருமான் உறைகின்ற திருவாஞ்சியம் என்னும் தலத்தை நீங்கள் அடைவீர்களாக

---

## இவ்வீசர் பாவம்போக்குவர்

புற்றில் ஆடரவோடு புனல் மதி
தெற்று செஞ்சடைத் தேவர் பிரான்பதி
சுற்றுமாடங்கள் சூழ் திருவாஞ்சியம்
பற்றி பாடுவார்க் குப்பாப மில்லையே.

பொழிப்புரை.

புற்றில் வாழும் படமெடுத் தாடுகின்ற பாம் போடு, கங்கை, சந்திரன் இவைகளை யணிந்த சிவந்த சடையுடைய தேவர்கட்கு அதிபதியான சிவபெரு மான் வசிக்கும் உயர்ந்த மாடங்கள் நிறைந்த திருவாஞ்சியம் என்னும் தலத்தைப் பாடுவோர்க்கு எத்தகைய பாபமும் இல்லாது நீங்குகின்றன.

---

## வாஞ்சியில் வசிப்போர் தேவரே யாவர்

அங்கமாறும் அருமறை நான்குடன்
தங்கு வேள்வியர் தாம்பயி லுங்நகர்
செங்கண் மாலிட மார்திரு வாஞ்சியம்
தங்கு வார்நம் அமரர்க் கமரரே.

பொழிப்புரை

ஆறு அங்கங்களும். நான்கு வேதங்களும் உறை கின்ற அந்தணர்கள்வசிக்கும் நகராகிய சிவந்த கண் களை யுடைய திருமால் தங்குகின்ற திருவாஞ்சியம் என்னும் தலத்தில் உரைபவர்கள் இந்திராதி தேவர் கட்கும் தேவராவார்கள்.

## இவ்வீசரைப்பணிந்தால் செல்வர் பெருகும்

நீறுபூசி நிமிர்சடை மேற்பிறை
ஆறு சூடும் அடிக ளுறைபதி
மாறு தாமெருநுங் கும்வயல் வாஞ்சியம்
தேறி வாழ்பவர்க் குச்செல்வ மாகுமே.

### பொழிப்புரை

திருநீற்றினை உடலிற் பூசி, உயர்ந்த சடைமீதில் சந்திரனையும், கங்கையையும் அணிந்த சிவபெருமான் வதியும் தாழ்கிய பயிர்கள் நெருங்கிய வயல்கள் நிறைந்த திருவாஞ்சியத்தில் குடியேறி வாழ்பவர்க் குச் சகலவித சம்பத்துக்களும் உண்டாகும்.

---

## திருவாஞ்சியம் தியானிக்கத்தக்கது

அற்றுப் பற்றின்றி யாரையு மில்லவர்க்
குற்றநற் றுணை யாவா னுறைபதி
தெற்று மாடங்கள் சூழ்திரு வாஞ்சியம்
கற்றுச் சேர்பவர்க் குக்கருத் தாவதே

பொழிப்புரை

ஆசையற்று நிர்கதியானவர்கட்கு தகுந்த துணைவரான சிவபெருமான் உறைகின்ற பதியான உயர்ந்த மாடமாளிகைகள் நிறைந்த திருவாஞ்சியம் என்னும் தலம் படித்து அதனை யடைபவர்கள் தியானிக்கத்தக்கதாகும்.

---

## பத்தியோடு பரமனைப் பணிக அல்லல்விடும்.

அருக்கனங்கி யமனொடு தேவர்கள்
திருத்துஞ் சேவடி யான்றிக ழுந்நகர்
ஒருத்தி பாக முகந்தவன் வாஞ்சியம்
அருத்தி யாவடை வார்க்கில்லை யல்லலே

திருச்சிற்றம்பலம்

பொழிப்புரை

சூரியன், அக்னி, யமன் ஆகிய தேவர்களின் பாவங்களை நீக்கிய சிவந்த அடிகள் வசிக்கும் நகர மாகிய உமையை வாமபாகத்திலுடையவரான சிவ

பெருமான் வசிக்கும் திருவாஞ்சியம் என்னும் திருப்பதியை அன்பினால் அடைபவர்கட்கு எத்தகைய துன்பமும் அணுகாவாம்.

---

உ

சிவமயம்

## திருவாஞ்சியத்தேவாரப் பதிகங்கள்.

சுந்தர மூர்த்தி சுவாமிகள் அருளிச்செய்தவை
திருவாஞ்சியம் பண் மியந்தைக்காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்

### வாஞ்சிநாதர் நற்பிறேரை நலியவிடார்

பொருவ னார்புரி நூலர் புணர் முலை யுமையவளோடு
மருவ னார்மரு வார்பால் வருவது மில்லைநம் மடிகள்
திருவ னார்பணிந் தேத்துந் திகழ் திருவாஞ்சியத்
[துறையும்
ஒருவ னாரடி யாரை யூழ்வினை நலிய வொட்டாரே.

பொழிப்புரை

சமான மில்லாதவரும் பூநூலைத்தரித்தவரும் நெருங்கிய தனங்களை யுடைய உமாதேவியோடு கூடியவருமான சிவபெருமான் தன்னைச் சேராதவர்களுக்குக் காட்சிக்கொடுப்பது மில்லை; திருமால் பணிந்து தொழும் சிறந்த திருவாஞ்சிய மென்னும் தலத்தில் உரைகின்ற பரம்பொருளான அப்பெருமான் தனதடியாரை ஊழ்வினையினல் துன்புறும்படி விடமாட்டார்

---

## வாஞ்சியீசர் நீற்றுமேனிமாண்பு.

தொறுவி லாளின வேறு துண்ணென இடிகுரல்
வெருவிச்
செறுவில் வாளை கண்ளோடச் செங்கயல்
பங்கயத் தொதுங்கக்
கறுவி லாயனத்தார்கள் காண்டகு வாஞ்சியத்தடிகண்
மருவி லாத வெண்ணீறு பூசுதன் மன்றுமொன்
றுடைத்தே

## பொழிப்புரை

பசுக்கூட்டங்களிடையே அவைகளின் இளங் காளைக்கன்றுகள் துள்ளி குதித்துக்கதர, அதனை இடி யோசை யென்று பயந்து வாளைமீன்கள் ஓட அதனால் சிவந்த கயல் மீன்கள் தாமரை மலர்க ளிடையே ஒதுங்கிடும் களங்கமில்லாத மனத் தினை யுடையவர்கள் வணங்குகின்ற திருவாஞ்சியத் தில் வசிக்கும் அடிகளாகிய சிவபெருமான் குற்ற மற்ற திருநீற்றினை தன் உடல் முழுதும் பூசுகின்ற தன்மையுடையவராவர்.

---

## வாஞ்சிநாதரின் அழகு

தூர்த்தர் மூவெயி லெய்து சுடுநுனைப் பகழிய
[தொன்றால்
பார்த்த னார்திரள் தோண்மேற் பன்றுனைப்
[பகழிகள் பாய்ச்சித்
தீர்த்த மாமலர்ப் பொய்கைத் திகழ்திரு வாஞ்சியத்
[தடிகள்
சாத்து மாமணிக் கச்சங் கொருதலை பலதலை
[யுடைத்தே.

## பொழிப்புரை

துஷ்டர்களான திரிபுராசுரர்களின் பட்டணங்களைச் சுடுகின்ற நுணியை யுடைய ஓரம்பால் எய்து அழித்தவரும், அர்ச்சுனனின் வலிய தோள்மீது அநேக அம்புகளை எய்து அவனது குறைகளைப் போக்கிய சிறந்த புஷ்பங்கள் நிறைந்த தடாகங்கள் நிறைந்த திருவாஞ்சியத் திலுறையும் சிவபெருமான் அணிகின்ற இரத்தினக் கச்சத்தின் ஒரு முனை பல தலைகளை யுடையதாகும்.

---

## திருநீற்றுக்கோலம்

சன்னை வெள்ளையங் குருகு தானது வாமெனக் கருதி
வள்ளை வெண்மல ரஞ்சி மறுகியோர் வாளையின்
[வாயில்
துள்ளுதெள்ளுநீர்ப் பொய்கை துரைமல்கு
[வாஞ்சியத்தடிகள்
வெள்ளை நுண்பொடிப் பூசும் விகிர்தமொன்
[றொழுகிலர் தாமே

பொழிப்புரை

வள்ளைக்கொடியினது வெண்ணிற மலர்களைக் கண்டுசெள்ளை மீன்கள், வெண்ணிறமான கொக்குகள் என்று எண்ணி பயந்து ஓடும்போது வாளைமீனின் வாயில்துள்ளுகின்ற தெளிந்தநீரினையுடையதடாகங்கள் நிறைந்த திருவாஞ்சியமென்னும் திருப்பதியில் வதியும் எம்பெருமான் வெண்ணிறமான திருநீற்றைப்பூசும் தன்மையினின்றும் மாறுபடாதவராவார்.

## வாஞ்சியீசர் திருவருகு.

மைகொள் கண்டரெண் டோளர் மலைமக
[ளுடனுறை வாழ்க்கை
கொய்த கூவின மாலை குலாவிய சடைமுடிக் குழகர்
கைதை நெய்தலங் கழனி கமழ்புகழ் வாஞ்சியத்
[தடிகள்
பைதல் வெண்பிறை யோடு பாம்புடன் வைப்பது
[பரிசே.

பொழிப்புரை.

கறுத்தகண்டத்தினை யுடையவர், எட்டுத் தோள்களை யுடையவர். பர்வதராஜன் மகளுடன் வாழ்பவர் வில்வமாலையை அணிந்தவர். சடைகள் தாங்கிய முடியை உடைய அழகர், இத்தகைய, தாழையும், நெய்

தல், மலரும் வாசனை வீசுகின்ற வயல்களையுடைய புகழ்பெற்ற திருவாஞ்சியத்திலுரைகின்ற எம்பெருமான் குறைந்தகலைகளையுடைய வெண்பிறைச் சந்திரனோடு. பாம்பையும் மகுடத்தில் அணிவர்.

---

## வாஞ்சிநாதர் வினைகளை வீழ்த்துபவர்.

காந்தை கூவின மாலை கடிமலர்க் கொன்றையுஞ் [சூடிப்
பரந்த பாரிடஞ் சூழ வருவர்நம் பரமாதம் பரிசால்
திருந்து மாடங்கள் நீடு திகழ் திருவாஞ்சியத் துறையும்
மருந்த னாடி யாரை வல்வினை நலியவொட்டாரே.

### பொழிப்புரை

கரந்தைமலர், வில்வமாலை, வாசனைமிகுந்த கொன்றைமலர், இவைகளை அணிந்து, ஏராளமானகணங்கள்சூழ வருகின்ற, அழகிய உயர்ந்த மாடங்கள் நிறைந்த திருவாஞ்சியம் என்னும் திருப்பதியில் எழுந்தருளியிருக்கும், மருந்து போன்றவராகிய நமதீசர், தனதன்பால், தன்னடியார்கள் வலிய வினைப்பயன்களால் துன்புறும்படி விடமாட்டார்.

## வாஞ்சிநாதர் பாதங்களே புகலிடம்.

அருவி பாய்தரு கழனி யலர்தரு குவளையங் கண்ணார்
குருவி யாய்கினி சேர்ப்பக் குருகினம் இரிதரு
[கிடங்கில்
பருவ ரால்குதி கொள்ளும் பைம்பொழில் வாஞ்சியத்
[துறையும்
கருவ ராலறி யொண்ணா இறைவன தறைகழல்
[சரணே

### பொழிப்புரை

அருவிகள் பாய்வதால் வயல்களில் மலர்கின்ற குவளை மலரைப்போன்ற கண்களையுடையமாதர்கள், விதைகளை உண்ணுகின்ற கிளிக்கூட்டங்களை வெருட்ட அதுகேட்ட கொக்கினங்கள் பயந்து மடுக்களில் தங்க, அங்குள்ளவரால் மீன்கள் பயந்துதுள்ளுகின்ற பசுமையான சோலைகளையுடைய திருவாஞ்சியம் என்னும் திருத்தலத்தில் குடி கொண்டிருக்கும் பிரம்மா விஷ்ணு ஆகிய இருவராலும் அரிய முடியாத இறைவரான எம்பெருமானின் திருவடித் தாமரைகள் சரணடையத்தக்கதாகும்.

## வாஞ்சிபீசன் பாதங்கள் வினைகடிவன.

களங்க ளார்தரு கழனி யளிதரக் களிதரு வண்டு
உளங்க ளார்களிப் பாட லும்பரி லொளித்திடுங் [காட்சி
குளங்க ளால் நிழற் கீழ்நற் குயில் பயில் வாஞ்சியத் [தடிகள்
விளங்கு தாமரைப் பாதநினைப்பவர்வினை நலிவிலரே.

### பொழிப்புரை.

களங்கள் பொருந்திய வயல்கள் அளிக்கின்ற தேனை உண்டு வண்டுகள் சந்தோஷத்தினால் ரீங்காரம் செய்ய குளக்கரைகளில் ஆலமரங்களின் நிழலிற் குயில்கள் பாடுங்காட்சிகள் நிறைந்த திருவாஞ்சியம்பதியில் வீற்றிருக்கின்ற சிவபெருமானின் திருவடித்தாமரைகளைத் துதிப்பவர் வினைப்பயன்களால் உண்டாகும் நலிவில்லாதவர் ஆவர்.

## வாஞ்சிநாதரே கதியாவார்

வாழை யின்கனி தானும் மதுவிம்மு வருக்கையின்
[சுளையும்
கூழை வானரந்தம்மிற் கூறிது சிறிதெனக் குழறித்
தாழை வாழையந் தண்டாற் செருச்செய்து
[தருக்கு வாஞ்சியத்துள்
ஏழை பாகனை யல்லால் இறையெனக்கருதுதலிலமே.

### பொழிப்புரை

வாழைப்பழங்களையும் தேன்சொரிகின்ற பலாச் சுளைகளையும் அடைந்த சிறுகுரங்குகள் தங்களுள் பாகம் சரிஇல்லையென்று சண்டை இட்டு தழைந்த வாழைத்தண்டுகளால் அடித்துக்கொண்டு வெற்றிச் செருக்குக் கொள்கின்ற திருவாஞ்சியம் என்னும் தலத்தில் உறைகின்ற தையலை வாமபாகத்தி லுடைய வரான சிவபெருமானை யல்லாமல் வேறுகதியை மனதாற் நினைத்தற்கில்லை.

## சுந்தரர்பாடல் கொண்டு இவ்விசனை வேண்டுக.

செந்நெலங்கலங் கழனித் திகழ்திரு வாஞ்சியத்
[துறையும்
மின்ன லங்கலஞ் சடையெம் மிறைவன தறைகழல்
பரவும்
பொன்ன லங்கல்நன் மாடப் பொழிலணி நாவலா
ரூரன்
பன்ன லங்கனன் மாலை பாடுமின் பத்தருளீரே.

திருச்சிற்றம்பலம்

### பொழிப்புரை

சிவந்த நெற்பயிர்கள் நிறைந்த கழனிகயுள் விளங்கும் திருவாஞ்சியம் என்னும் தலத்தி னுறையும், மின்னல்லாகிய மாலையையும் சடையுமணிந்த எம்திறைவனது சப்திக்கின்ற பாதங்களைத் தோத்தரிக்கின்ற பொன்னுலாகிய சிறந்த மாடங்களாலும் பொழிலாலும் அலங்கரிக்கப்பட்ட திருநாவலூரன் என்கின்ற சுந்தரமூர்த்தி சுவாமிகள் சொல்லுகின்ற பாமாலையைப் பக்தர்களாகிய நீங்கள் பாடுவீர்களாக

அருணகிரிநாதர் அருளிச்செய்த

# ஸ்ரீவாஞ்சியம் --- திருப்புகழ்

தனத் தனந்தன த்ானன தானன
தனத் தனந்தன தானன தானன—தனதான.

இபமாந்தர் சக்ரபதி செறி
படையாண்டு சக்ரவரிசைக
ளிடவாழ்ந்துதிக்கு விசயமண் —ணரசாகி

இறுமாந்து வட்டவணை மிசை
விரிசாந்து வெற்றிமலர் தொடை
யெழிலார்ந்து பட்டு வகை பரி —மணலேபங்

தபனுங்க ரெத்நவணிகலன்
ணிவைசேர்ந்த விச்சைவடிவது
தமர்சூழ்ந்து மிக்கவுயிர் நழு --வியபோது

தழல்தாங் கொளுத்தியிடவொரு
பிடிசாம்பல் பட்டதறிகிலர்
தனவாஞ்சை மிக்கனடி தொழ —நினையாரே

உபசாந்த சித்தகுருகுல
பவபாண்டவர்க்கு வரமரு
ளுருவோன் பிரசித்திநெடியவன்—ரிஷிகேசன்

உலகீன்ற பச்சையுமையணன்
வடவேங்கடத்தி லுறைபவன்
னுயர் சார்ங்க சக்ரகரதலன் —மருகோனே

திரிபுராந்தகர்க்கு வரசுத
ரதிகாந்தன் மைத்துன முருக
திறல் பூண்ட சுப்ரமண்ய சண் —முகவேலா

திரைபாய்ந்த பத்மதடவய
லியல்வேய்ந்த முத்தியருள்தரு
திருவஞ்சியத்திலமரர்கள் —பெருமானே

சுபம்! சுபம்!! சுபம்!!!

68751

Sri Parimala Press, Koranad.

O/23:88. 21193.V
N46,

BB
4-135

*Sri Parimala Press, Koranad.*
P. I. C. T. E. NO. 91. C. 1000. 15—1—46.